1970 நவம்பர் 26]

Harijans of Sundivakkam

* 5 Q.—DR. H. V. HANDE: Will the Hon. Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether the Hon. the Minister has received a complaint, dated 19th March 1970 from the Harijans of No. 309, Sundivakkam village of Madhurantakam taluk against the alleged atrocities committed on them by the Caste Hindus of the village; and

(b) if so, the details thereof and the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) சுண்டிவாக்கம் கிராம அரிசனங்கள் ஜாதி இந்துக்களால் தாக்கப்பட்டனர் என்றும் அவர்களுடைய குடிசைகள் நாசமாக்கப் பட்டன என்றும் அரிசனங்கள் முறையிட்டுள்ளனர். சட்ட ஒழுங்கை நிலைநிறுத்த காவல் துறையினர் உடனடியான நடவடிக்கை எடுத்து இருதரப்பிலும் உள்ள குற்றவாளிகளின் மீது வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். வழக்குகள் விசாரணையில் இருக்கின்றன.

திரு. கே. விநாயகம்: இந்த ஜாதி இந்துக்களால் தாக்கப்பட்ட அரிஜனங்களுக்கு என்ன நஷ்டம் ஏற்பட்டது? அந்த நஷ்டத்தை ஈடுகட்ட அரசாங்கம் எடுத்துக் கொண்ட பணி என்ன? அந்தச் சண்டை எந்த அடிப்படையில் வளர்ந்தது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: பொருள் வகையில் எந்தவித நஷ்டமும் ஏற்படவில்லை. ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டார்கள். ஏற்கனவே அரிசனங்கள் இருந்த பகுதியில் 17 குடிசைகளில் 34, 36 குடும்பத்தினர் வசித்து வந்தார்கள். அந்த இடம் போதாத நிலையில் பக்கத்தில் இருக்கும் நிலத்தில் குடிசை போட்டார்கள். அதை ஜாதி இந்துக்கள் தடுத்திருக்கிறார்கள். அதை மீறி யாரோ ஒருவர் குடிசை போட்டார். அதனால் இருவருக்கிடையே தகராறு ஏற்பட்டது. மாவட்ட கலெக்டர் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எல்லப்பன் அவர்களையும் அழைத்துச் சென்று அங்கு விசாரித்தார்கள். அந்த இடம் ஜாதி இந்துக்களுக்குச் சொந்தம் இல்லை, அரசாங்க நிலந்தான் என்று தெரிய வந்தது. டிஸ்ட்ரிக்ட் முனிசிப் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டு அந்த இடம் ஜாதி இந்துக்களுக்குத்தான் கொடுக்கப்பட வேண்டுமென்று தீர்ப்புக் கூறப்பட்டிருக்கிறது. இது தற்போது பரிசீலனையில் இருந்து வருகிறது.

பயிர்க் காப்புறுதித் திட்டம்.

*6 வின—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

பயிர் இன்ஸ்யூரன்ஸ் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1970 நவம்பர் 26

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்திய அரசால் மாநில அரசுகளுக்குச் சுற்றி அனுப்பப்பட்ட பயிர்க் காப்புறுதி குறித்த வரைவு மாதிரி மசோதாவும் மாதிரித் திட்டமும் பரிசிலிக்கப்பட்டு வருகின்றன.

திரு. என். கிட்டப்பா : அடிக்கடி வெள்ளச் சேதத்தால் பயிர்கள் நாசமாகின்றன. விவசாயிகளுக்கு எந்தவிதமான நிவாரணமும் இல்லை. அண்மையில் தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தைக் கண்ணுற்ற நமது அரசாங்கம இனிமேலாவது பயிர் இன்ஷுரன்ஸ் திட்டத்தை விரைவில் செயல்படுத்த முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட ஒரு திட்டம் தேவையென்று நினைத்துத்தான் மத்திய அரசாங்கம் ஒரு வரைவுத் திட்டத்தை மாநிலங்களுக்கு அனுப்பியிருக்கிறது. ஒவ்வொரு மாநில அரசும் அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது அதற்கு முன்னோடியாக கோவைப் பகுதியில் வேளாண்மைத் துறை இயக்குநர் அவர்கள் முன்னோடித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டிருந்தார். 38,591 ரூபாய் செலவில் ஆய்வுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. கோவையில் இருந்து உடுமலைப்பேட்டை, தாராபுரம், காங்கேயம், கோபி பகுதிகளில் சோளம், கம்பு பயிர்களை இந்தத் திட்டத்திற்காக எடுத்துக்கொண்டிருக்கிறது. இதில் முடிவு தெரிந்த பிறகுதான் எந்தவகையில் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று பரிசீலித்து அதற்குப் பிறகு நமது ஒப்புதலை மத்திய அரசிற்குத் தெரியப்படுத்த முடியும்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: இந்த க்ராப் இன்ஷுரன்ஸ் என்பது பயிர் அழிவதற்கு மட்டுமல்ல, ஒரு பயிரின் விலை குறையும்போது அதற்கும், அதன் விலை குறையும்போதும் அதனால் ஏற்படும் நஷ்டத்திற்கு நஷ்டயீடு கொடுப்பதற்கும் இந்த மசோதாவில் வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அழிவு ஏற்படும்போது அப்போது அந்த விவசாயிகளுக்கு எந்த வகையில் உதவி செய்வது என்ற வகையில் அவர்களுக்கு துணையாக இருப்பதற்கு இந்த காப்புறுதித் திட்டத்தை பரிசீலனை செய்கிறோமே தவிர விலையைப்பற்றியோ அல்லது உதவி பற்றியோ வேறு எந்த வகையிலும் இதில் குறிப்புகள் இல்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இல்லை என்பதினால்தான் சர்க்கார் இதைப்பற்றி ஆலோசனை சொல்லுமா என்று கேட்கிறேன். கட்டுப்படியான விலை கிடைக்காமல் இருக்கும்போது அதையும் சேர்த்து செய்வதற்கு சர்க்கார் ஆலோசனை கூறுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இப்போது விலை கட்டுப்படியாகவில்லை என்று விவசாயிகள் கூறுவதாகத் தெரியவில்லை. இன்று சர்க்காரே நல்ல விலைக்கு விவசாயிகளிடம்

1970 நவம்பர் 26]

இருந்து நெல்லை கொள்முதல் செய்வதன் காரணமாக விலைக்குறைவு என்ற எண்ணமே இப்போது ஏற்படவில்லை, ஆகவே அதைப் பற்றி அதிகமாகச் சிந்திக்கத் தேவையில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நான் கேட்பது, விலை ஏறுவது அல்லது இறங்குவது என்பதல்ல. அப்படி இறங்கினால் இதையும் பற்றி சர்க்கார் ஆலோசனை கூறுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: குறைந்த பட்ச விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதை குறைய விடமாட்டோம். அப்படி ஒரு கஷ்டம் விவசாயிகளுக்கு வருவதை சர்க்கார் பொறுக்காது. அதை சர்க்கார் நிச்சயம் பார்த்துக்கொள்ளும்.

திரு. கே. என். குமாரசாமி : பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தின் மூலம் குறிப்பிட்ட சில பயிர்களை மட்டுமே எடுத்துக் கொண்டு அரசாங்கம் பரிசிலனை செய்வது என்பதால் அந்தப் பயிர்களுக்கு மட்டும் இந்த இன்ஷூரன்ஸ் திட்டத்தின் பயனை அளிப்பதன்மூலம் மற்ற விவசாயிகளை அது பாதிக்காதா ? பருத்தி, சோளம், கம்பு போன்ற குறிப்பிட்ட பயிர்களை மட்டும் எடுக்கும்போது புன்செய் என்றால் அப்படி ஒரு சில பயிர்களை மட்டும் எடுப்பதை விட மற்றப் பயிர்களைப் பற்றியும் பரிசிலனை செய்து அவற்றையும் இதன் கீழ் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தோட்டம், மலைப் பகுதித் தோட்டப் பயிர்கள் இலவைகளைத் தவிர வேறு எல்லாப் பயிர்களும் இத்திட்டத்தில் அடங்குகின்றன. இன்று முன்னோடித் திட்டமாக கோவைப் பகுதியில் கம்பு, சோளம் போன்ற புன்செய் பயிர்களுக்கும் திட்டப் பணிப் பகுதிகள், மற்றும் திட்டப் பணிப் பகுதிகளல்லா பிற பகுதிகளின் கீழுள்ள நெற்பயிர்கள் குறித்தும் ஒரு பைலட் ஸ்கீமாக நடத்தி வருகிறோம். பரீட்சார்த்தமாக நடத்தப்படுகிற இதிலிருந்து எடுக்கப்படுகிற முடிவுகளை வைத்துக்கொண்டு மேலும் என்ன செய்வது என்பதைப் பற்றி அரசாங்கம் முடிவு செய்யும்.

Strike by Beedi workers in Madras

* 7 *Q*.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Labour and Backward Classes be pleased to state—

(*a*) whether the Beedi workers at Madras City went on a strike about the 25th June 1970 ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) நீண்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் தொழிற்சாலைத் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் 4—7—1970 அன்று இதற்கு உடன்பாடு காணப்பட்டது. இந்த உடன்பாட்டின்படி சுமார் 10,000 தொழிலாளர்கள் கலந்து கொண்ட வேலைநிறுத்தம் நின்று 5–7–1970 முதல் அவர்கள் வேலைக்குத் திரும்பினர்.